Jain temple in Vijayamangalam

* 437 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the Jain temple in Vijayamangalam in Erode taluk has been taken over by the Department; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) & (இ) 1959-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் விதித்துறைகளையும் அதன் கீழ் வகுக்கப்பட்ட விதிகளையும் கோயமுத்தூர் மாவட்டம் ஈரோடு வட்டம், விஜயமங்கலத்திலுள்ள (1) ஸ்ரீ அமளீஸ்வரர் கோயில், திங்களூர், (2) ஸ்ரீ சந்திரப்பிரபா தீர்த்தங்கர் கோயில், மெட்டுபுதூர் ஆகிய இரு ஜைனர் கோயில்களுக்கு நீட்டித்துள்ளது. சமண மதத்தைச் சார்ந்தவர்கள் அக் கோயில்களின் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவர் அவர்களே, இது சமணக் கோயிலாக இருப்பதால் இந்து சமய நிர்வாகத்தின் கீழ் ஒப்படைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இந்த சமய அறநிலையத் துறையின்கீழ் எடுக்கப்பட்டு அதற்காக அறங்காவலரும் நியமிக்கப்பட்டு உள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குப் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பேரவைக்கு நான்கு முறைகளாகப் பல் வேறு தொகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் "டாக்டர்" பட்டம் வழங்கியிருப்பதை பேரவைத் தலைவர் என்ற முறையிலேயும் இந்த மாமன்றத்தின் சார்பிலேயும் என்னுடைய பாராட்டுதல்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்)

இந்த மகிழ்ச்சியான நேரத்திலே அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு "டாக்டர்" பட்டம் அளித்து இருப்பதன் மூலமாக உண்மையிலேயே அவர்களுக்குச் சிறப்புச் செய்வதைக் காட்டிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஏற்கனவே தனக்கு இருக்கிற பெரிய சிறப்புக்களோடு இன்னும் ஒரு சிறந்த சிறப்பை உண்டாக்கிக் கொண்டு விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1971 ஜூலை 24]

[மாண்புமிகு பேரவைத் தலைவர்]

மாண்புமிகு கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிலே முப்பது முப்பத்தைந்தாண்டுக் காலமாகப் பொது வாழ்விலே எத்தனையோ மாதிரியான நல்ல அடிச்சுவடுகளைப் பதித்தவர்கள். அவர்களைக் கடந்த முப்பது ஆண்டுக் காலமாக நான் அறிவேன். அவர்கள் ஒரு சிறந்த எழுத்தாளராக, நல்ல பேச்சாளராக, பத்திரிகை ஆசிரியராக, பெரிய சமதர்மவாதியாக, சுயமரியாதை வீரராக, புனிதமான கொள்கைக்காக உழைக்கும் உழைப்பாளராகத் திகழ்கின்றார்கள்.

தமிழ்நாட்டிலே ஏற்படுகின்ற அரசியல் சமுதாயப் பொருளாதார மாறுதல்களிலே அவர்களுக்கு நிரந்தரமான இடமுண்டு. முப்பது ஆண்டுக் காலமாக தமிழ் எப்படியிருந்தது. இன்றைக்கு எப்படி மாறியிருக்கிறது. அவர்களுடைய நடையின் மூலமாகவும், இலக்கியச் செல்வத்தின் மூலமாகவும் புதுமாதிரியான கருவூலங்களை நம்முடைய இலக்கியத்திற்கு அவர்கள் சேர்த்திருக்கிறார்கள். தென்றலின் குளிமையை புயலின் வேகத்தை எரிமலையின் சீற்றத்தை அருவியின் ஆலோலத்தை அவர்கள் எழுத்து நடையிலே நாம் காண்கிறோம். அவர்கள் பேசுகின்றபொழுது இலட்சக் கணக்கான மக்கள் குழுமியிருக்கின்ற கூட்டங்களிலே எத்தனையோ பேர்கள் கண்ணீர் விட்டு அழுவதை நான் பல நேரங்களிலே பார்த்து இருக்கின்றேன். தமிழ்நாட்டினுடைய பொதுவாழ்வில் ஈடுபட்டு சிறைச்சாலைக்குச் சென்று ஒரு பெரிய வாழ்க்கையைக் கொண்ட அந்தத் தலைவருக்கு தமிழ்நாட்டில் உள்ள ஒரு முக்கியமான கலாச்சாரப் பெருமைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகம் "டாக்டர்" என்ற பட்டத்தை வழங்கியிருப்பது மிக மிகப் பொருத்தமாகும்.

பொதுவாழ்வில் தலைவர்கள் பிறக்கிறார்கள்; சிலபேர்கள் தலைவர்களாக ஆக்கப்படுகிறார்கள்; சிலர் தலைவர்களாக ஆகின்றார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் மூன்றாவது ரகத்தைச் சேர்ந்தவர்கள். தலைவராக ஆவதற்குக் குடிப் பெருமை வேண்டும், குலப் பெருமை வேண்டும், பணப் பெருமை வேண்டும், பாரம்பரியப் பெருமை வேண்டும் என்றெல்லாம் இருந்த நிலைமையை மாற்றி தமிழ்நாட்டிலுள்ள கோடானுகோடி ஏழை எளிய மக்களும் நாட்டைத் தலைமை தாங்கி நடத்திச் செல்ல முடியும் என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்தவர்கள் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆகும்.

தமிழ்நாட்டு மக்களுடைய நம்பிக்கையின் நாதமாகவும் இதய ஒலியாகவும் இருந்து இரண்டரை ஆண்டுக் காலமாக திறமையுடன் பொறுப்பேற்று தமிழ் நாட்டிலே மட்டுமல்ல, இந்திய பூபாகத்தின் மற்ற மாநிலங்களிலும் வெளி நாடுகளிலும் உள்ளவர்களால் நல்ல நிர்வாகத் திறன்பெற்ற முதல் அமைச்சர் என்று பாராட்டப் பெற்ற அவர்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் "டாக்டர்" என்ற பட்டம் வழங்கியிருக்கிறது. முதலமைச்சர் மாநாடுகளிலும் சரி, வெளி மாநிலங்கள், வெளிநாட்டவர்கள் இவர்களை யெல்லாம் சந்திக்கின்ற நேரத்திலும் சரி அவர்களுடைய அறிவாற்றலையும் வாதிக்கின்ற திறமையினையும் எடுத்துரைக்கின்ற சிந்தனைத் திறனையும்

[பேரவைத் தலைவர்]

நான் கண்டிருக்கிறேன். அவர்கள் இரண்டரை ஆண்டுக் காலமாக பொறுப்பேற்றுக் கொண்டு அதனை ஒரு நல்ல வாய்ப்பாகக் கருதி மக்களுக்கு, கோடிக் கணக்கான மக்களுக்கு நன்மைகள் செய்கின்ற பணியிலே ஈடுபட்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட தலைசிறந்த அந்தத் தலைவருக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் "டாக்டர்" என்ற பட்டம் வழங்கியிருக்கிறது.

கடந்த தேர்தலிலே தமிழ்நாட்டு மக்கள் பெரிய நம்பிக்கை வைத்து அவர்களுடைய இதய ஒலி, அபிலாஷைகள் ஆகியவற்றின் சின்னமாகவும் வெற்றியுடன் அவர்கள் வெளிவந்தார்கள். இன்றைக்கு ஒரு பெரிய சமதர்ம சமுதாயம் அமைக்கின்ற காரியத்திற்கும் பொருளாதாரப் புரட்சிக்கும் சமூகப் புரட்சிக்கும் தன்னை ஒரு கருவியாக ஏற்றுச் செயல்படுகின்ற அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் இன்னும் வளருகின்ற வகையில் நல்வாழ்த்துக்களை பேரவையின் எல்லாப் பகுதியிலும் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சார்பிலேயும் தெரிவித்துக்கொண்டு அவர்கள் பல ஆண்டுக்காலம் நீடுழி வாழ இன்னும் நல்ல ஆற்றல்களையும் பல வெற்றிகளையும் பெற்று இந்த நாட்டு மக்களை முன்னேற்ற வேண்டுமென்ற முறையிலே என்னுடைய இதயங்கனிந்த பாராட்டுதல்களையும் தெரிவித்து மன்றத்தின் உறுப்பினர்களின் சார்பிலே தெரிவித்துக்கொள்கின்ற முறையிலே அவர்கள் கரவொலிசெய்து ஆமோதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (கரவொலிகள்).

(3) அறிவிப்புகள்

(அ) கவன ஈர்ப்புகாரியம் ஒத்திவைக்கப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவை விதி 41-ன் கீழ் திரு. கு. காமாட்சி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு பொதுமுக்கியமான காரியமொன்றைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அது ஒத்திவைக்கப்படுகிறது.

(4) கவன ஈர்ப்பு

தென்னை, வாழை மரங்கள் தொத்து நோய்களால் பாதிக்கப்பட்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. ஏ. எம். இராஜா அவர்கள் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசரப் பொதுமுக்கியமான காரியத்தைக் கொண்டுவருவார்கள்.